**சுதந்திரத்திற்கு பின்னரான அரசியலமைப்புகளும் சிறுபான்மையினரின் நிலைமைகளும்**
**(சட்டத்தரணி கனக நமநாதன் LL.B) (பாகம் - 25)**

**அரசியலமைப்பின் 17வது திருத்தத்தின் தொடர்ச்சி**
**குறித்த அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள உயர் பதவிகளாவது:**

பகுதி 1 – பிரதம நீதியரசரும் உயர் நீதிமன்ற நீதியரசர்களும்: மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரும்: மேன்முறையீட்டு நீதிபதிகளும்: நீதிச்சேவை ஆணைக்குழவின் உறுப்பினர்களும் (தலைவரைத் தவிர)

பகுதி 2. – சட்டமா அதிபர்: கணக்காய்வாளர் நாயகம்: பொலிஸ் மா அதிபர்: நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர்: பாராளுமன்ற செயலாளர் நாயகம்:

**41 (ஈ)** அரசியலமைப்புச் சபைக்கான செயலாளரை அந்தச் சபையே தெரிந்தெடுக்கும். சபைக்குத் தேவையான உத்தியோகத்தர்களை சபை தீர்மானிக்கும் நிபந்தனையுடன் சபையின் தொழிற்பாட்டை செயற்படுத்த நியமிக்கலாம்.

**41 (உ)** சபைச் செயலாளர் தேவைக்கேற்பவும் தலைவரின் அறிவுறுத்தலுக்கு இணங்கவும் சபையை கூட்டவேண்டும். சபைத்தலைவர் பங்கேற்காதபோது பிரதமமந்திரி தலைமை வகிப்பார். அவருமில்லாத போது எதிர்க்கட்சி தலைவர் அல்லாது போனால் பிரசன்னமாயிருக்கும் ஒருவரை அன்றைய தினத்திற்கு தவைராக தெரிவுசெய்து கூட்டத்தை நடத்தலாம். கூட்டம் கூடுவதற்கான கோரம் 06 உறுப்பினர்கள் ஆகும். எடுக்கப்படும் தீர்மானங்கள் யாவும் கூடியவரையில் ஏகமனதாக இருக்கவேண்டும் என்பதே எதிர்பார்ப்பாகும். வருகை தந்தவர்களில் ஐந்து உறுப்பினர்கள் சாதகமாக வாக்களிப்பின் தீர்மானம் ஏற்கப்படும். சபைத் தலைவருக்கு ஒரு தீர்மானிக்கும் இறுதி வாக்கு உண்டு. 41 (ஆ) 41 (இ) ஆகியவற்றின் கீழ் நியமனங்களை செய்வதற்கு தேவையான நடபடிமுறைமைகளை சபையே தீர்மானிக்கும். (உ) (ஊ) பந்திகளின் கீழ் நியமனம் செய்யப்பட்டவர்கள் முன்கூட்டியே அனுமதி பெறாது அடுத்தடுத்து இரண்டு கூட்டங்களுக்கு சமூகமளிக்க தவறும் பட்சத்தில் அவர்கள் தங்கள் உறுப்பினர் அந்தஸ்தை வெற்றிடமாக்கி விட்டார்கள் எனக் கணிக்கப்படும்.

**<u>உறுப்புரை 41 ஊ</u>** அரசியலமைப்பினால் அல்லது வேறு எழுத்திலான சட்டத்தினால் சுமத்தப்படுகின்ற அல்லது குறித்தொதுக்கப்படுகின்ற கடமைகளையும் தொழிற்பாடுகளையும் அரசியலமைப்பு சபை நிறைவேற்றவும் முடிவு நோக்கியதாக முன்னெடுக்கும் என்றும் குறிப்பிடுகின்றது.

**<u>உறுப்புரை 41 எ</u>** அரசியலமைப்பு சபையின் செயற்பாட்டுக்குத் தேவையான நிதி திரட்டிய நிதியத்திலிருந்து பெறப்படும் எனப்பட்டுள்ளது.

**<u>உறுப்புரை 41 ஏ</u>** அரசியலமைப்பு சபை எடுக்கும் தீர்மானங்கள் அல்லது அனுமதித்தல்கள் அல்லது பரிந்துரைப்புக்கள் எந்த நீதிமன்றத்தாலும் வழக்கேற்கவோ கேட்கவோ முடிவெடுக்கவோ அல்லது கேள்விக்குட்படுத்தவோ முடியாது என்றும் சபையால் எடுக்கப்படும் தீர்மானங்களனைத்தும் எல்லா விடயங்களுக்காகவும் இறுதியானதும் முடிவானதுமாகும் என்றுள்ளது.

**<u>ஊறுப்புரை 52இல் திருத்தம்.</u>:** இத்திருத்தத்தின் மூலம் அரசியலமைப்பின் உறுப்புரை 52இல் 7வது பந்தி இரத்துச் செய்யப்பட்டு அதற்குப் பதிலாக புதுப்பந்தி

மாற்றீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி 1. பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் அலுவலகம் 2. நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலவலகம் 3. அரசியலமைப்புச் சபை 4. பகிரங்க சேவை ஆணைக்குழு 5. தேர்தல் ஆணைக்குழு 6. தேசிய பொலிஸ் ஆணைக்குழு 7. அமைச்சரவை செயலாளரின் அலுவலகம் ஆகியவையும் அத்துடன் கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களம் என்பதும் இச்சட்டத் திருத்தத்தால் அரசாங்கத்தின் திணைக்களங்களாக இருக்காது என்றும் கூறப்பட்டுள்ளது.

**அரசியலமைப்பின் 9வது அத்தியாயம் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக புது அத்தியாயம் மாற்றீடு செய்யப்பட்டு நிறைவேற்றுத்துறை - பகிரங்க சேவை என்ற தலைப்பில் புதிதாகச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.**

**பகிரங்க சேவை ஆணைக்குழு**

**அரசியலமைப்பு உறுப்புரை 54இன்படி :** ஒரு பகிரங்க சேவை ஆணைக்குழு தாபிக்கப்படும். அதில் 09 உறுப்பினர்கள் இருப்பார்கள். உறுப்பினர்கள் அரசியலமைப்புச் சபையினால் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிந்துரைக்கப்பட்ட பின் சனாதிபதியினால் நியமிக்கப்படுவார்கள். அதில் மூன்று உறுப்பினர்களுக்கு குறையாதவர்கள் பகிரங்க சேவையில் 15 வருட சேவை அனுபவம் கொண்டவர்களாக இருத்தல்வேண்டும். இவர்கள் பாராளுமன்றம் உட்பட எந்தச் சபையிலும் பிரதிநிதியாக இருக்கமுடியாது. மூன்று வருட காலத்திற்கு உறுப்பினராக செயற்படலாம். ஒருவர் இரண்டு தடவைக்கு மேல் உறுப்பினராக இருக்கமுடியாது. அரசியலமைப்பு சபையின் பரிந்துரையின் மேல் சனாதிபதியால் ஆணைக்குழு உறுப்பினர் ஒருவர் அதன் செயலாளராக நியமிக்கப்படுவார். தொடர்ச்சியாக மூன்று கூட்டங்களுக்கு சமூகமளிக்கத் தவறும் உறுப்பினர் தனது உறுப்பினர் அந்தஸ்தை இழந்துவிடுவார். இவ்வுறுப்பினர்களின் வேதனம் பாராளுமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டு திரட்டு நிதியத்திலிருந்து பெற்றுக் கொடுக்கப்படும். தண்டணைச் சட்டக் கோவை 9ம் அத்தியாயத்தின்படி இவர்கள் அரச பகிரங்க சேவையாளராக கருதப்படுவர்.

**அரசியலமைப்பு உறுப்புரை 55 இன்படி :** பகிரங்க சேவையாளர்களினது நியமனம் பதவியுயர்வு இடமாற்றம் ஒழுக்காற்று நடவடிக்கைகள் கண்காணித்தல் பதவிநீக்கல் ஆகிய பணிகள் ஆணைக்குழுவின் அதிகாரத்தில் அடங்கியிருக்கும். ஆனால் திணைக்களத் தலைவர்கள் உயர் பதவி வகிப்பவர்களின் நியமனம் பதவியுயர்வு இடமாற்றம் ஒழுக்காற்று நடவடிக்கைகள் கண்காணித்தல் பதவிநீக்கல் ஆகியவை ஆணைக்குழுவினது அபிப்பிராயத்தை அறிந்துகொண்டதன்மேல் அமைச்சரவையின் முடிவில் தங்கியிருக்கும். ஒட்டுமொத்தமாக பகிரங்க சேவையாளர்களினது பதவி சம்பந்தமான கொள்கை செயற்திட்டம் ஆகியவற்றை தீர்மானிப்பதும் செயற்படுத்துவதும் அமைச்சரவையினது பொறுப்பிலிருக்கும். ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் யாவும் பாராளுமன்றத்தின் பொறுப்புக்கூறலுக்கு உட்பட்டதாகும். அத்துடன் ஒவ்வொரு வருட முடிவிலும் ஆணைக்குழு அடைந்த சாதனை அறிக்கை ஒன்றை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

**அரசியலமைப்பு உறுப்புரை 56 இன்படி :** ஆணைக்குழு மூன்று வெளியாட்களைக் கொண்ட ஒரு செயற்குழுவை நியமித்து தான் செயற்படுத்த வேண்டிய பணிகளை

அக்குழுவுக்கு அதிகாரப் பரவலாக்கம் மூலம் கையளித்துவிடலாம். அக்குழுவின் நியமனம் பற்றியும் அச்செயற்குழு ஒழுகவேண்டிய விதிகளையும் நடைமுறைகளையும் ஆணைக்குழு தீர்மானித்து வர்த்தமானியில் பிரசுரித்து வெளியிடப்படல் வேண்டும். பகிரங்க சேவையாளர்களினது நியமனம் பதவியுயர்வு இடமாற்றம் ஒழுக்காற்று நடவடிக்கைகள் கண்காணித்தல் பதவிநீக்கல் ஆகிய பணிகளைக் கையளிக்கலாம். அக்குழுவுக்கான செயளாலரை ஆணைக்குழு நியமிக்கும்.

**அரசியலமைப்பு உறுப்புரை 57 இன்படி :** ஆணைக்குழு ஒரு தனிப்பட்ட அதிகாரிக்கும் அதிகாரங்களை கையளித்து அவ்வதிகாரியின் மூலமும் பணிகளைச் செயற்படுத்தலாம். ஆணைக்குழு தீர்மானிக்கும் நிபந்தனைகளை நடைமுறைகளை பின்பற்றும்படியான வகையில் அதிகாரங்களை கையளிக்கலாம். இங்கு சில உயர் தரங்களைக் கொண்ட பகிரங்க சேவையாளரின் நியமனம் பதவியுயர்வு இடமாற்றம் ஒழுக்காற்று நடவடிக்கைகள் கண்காணித்தல் பதவிநீக்கல் ஆகிய பணிகள் கையளிக்கப்படும். இந்த நியமனமும் நிபந்தனை நடைமுறைகளும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும்.

(தொடரும்)